**TAGORE ENGINEERING COLLEGE**
**DEPARTMENT OF MANAGEMENT STUDIES**


## ZOHO MOU S

The Department of Management Studies signed an MOU with Zoho Corporation Private Limited, Chennai ON 29.08.2024.



**TAGORE ENGINEERING COLLEGE**
**DEPARTMENT OF MANAGEMENT STUDIES**







**TAGORE ENGINEERING COLLEGE**
**DEPARTMENT OF MANAGEMENT STUDIES**

# 'மாணவர்களை தொழில் திறன் மிக்கவர்களாக மாற்ற வேண்டும்'



வண்டலூரை அடுத்த ரத்தினமங்கலம் தாகூர் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற புரிந்துணர்வு ஒப்பந்த பரிமாற்ற நிகழ்வில் பங்கேற்ற ஜோஹோ நிறுவன இயக்குநர் கே.பி.நாராயணா, தொழில்நுட்ப பயிற்சியாளர் பிரவீன், தாகூர் பொறியியல் கல்லூரி முதல்வர் ஆர்.ரமேஷ் உள்ளிட்டோர்.

**தாம்பரம், செப். 3:** மாணவர்களை தொழில் திறன் மிக்கவர்களாக்க வேண்டும் என்று ஜோஹோ கார்ப்பரேஷன் நிறுவன இயக்குநர் கே.பி. நாராயணா கூறியுள்ளார்.

வண்டலூரை அடுத்த ரத்தினமங்கலம் தாகூர் பொறியியல் கல்லூரியில் மேலாண்மைத் துறை சார்பில் ஜோஹோ உலகளாவிய பயிற்சி உத்தி கார்ப்பரேஷன் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளும் நிகழ்வு திங்கள்கிழமை நடைபெற்றது.

அந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தாகூர் பொறியியல் கல்லூரி முதல்வர் ஆர் .ரமேஷ்,ஜோஹோ இயக்குநர் கே.பி.நாராயணா ஆகியோர் கையொப்பமிட்டு பரிமாறிக் கொண்டனர்.

பின்னர் ஜோஹோ இயக்குநர் கே.பி.நாராயணா செய்தியாளர்களிடம் கூறியதாவது:

மாணவர்களின் அறிவாற்றலை தொழில் துறையின் இன்றைய தேவைக்கேற்ப மேம்படுத்த இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் உதவியாக இருக்கும்.

மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குத் திறன் மேம்பாடு பயிற்சி வழங்கி மாணவர்களைத் தொழில் திறன் மிகுந்த மனிதவளமாக மேம்படுத்த திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் மாணவர்கள் வேலை வாய்ப்புகளைப் பெற முடியும் என்றார் அவர்.

இந்நிகழ்வில் ஜோஹோ நிறுவன தொழில்நுட்ப பயிற்சியாளர் பிரவீன், தாகூர் பொறியியல் கல்லூரி ஆராய்ச்சி மற்றும் கல்வித் துறை முதல்வர்கள் இளங்கோவன், கே.ஸ்ரீனிவாசன் ஆகியோர் உடன் இருந்தனர்.